Encl : 1

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF THE COMMON BIO-MEDICAL WASTE TREATMENT FACILITY AT S.F.NO.249/3, KEELAKOTTAI GROUP, MUTHUVAYAL VILLAGE, PARAMAKUDI TALUK, RAMANATHAPURAM DISTRICT ON 17.09.2025 AT 10.30 A.M AT M/S.SRI JEYAMANI SARASWATHI THIRUMANA MAHAL, DOOR NO. 66/1A, BOGALUR, NEAR JSK HP PETROL PUMP, SATHIRAKUDI VILLAGE, PARAMAKUDI TALUK, RAMANATHAPURAM DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Thiru. Govindarajalu | : | District Revenue Officer, Ramanathapuram. |
| 2. | Thiru. Saravana Perumal | | Revenue Divisional Officer, Paramakudi |
| 3. | Thiru. R. Dhilip Kumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ramanathapuram. |
| 4. | Thiru.Varathan | : | Tahsildar , Paramakudi. |
| 5. | Thiru. Thirunavukarasu | : | Block Development Officer, Bogalur. |
| 6. | Project Proponent and public | : | 109 Nos (List enclosed) |

**WELCOME ADDRESSED BY DISTRICT ENVIRONMENTAL ENGINEER, TAMILNADU POLLUTION CONTROL BOARD, RAMANATHAPRUAM, THIRU. R. DHILIP KUMAR:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ramanathapuram welcomed the District Revenue Officer, Ramanathapuram, Revenue Divisional Officer, Ramanathapuram, and general public attending the public hearing for the proposed project of the Common Bio-Medical Waste Treatment Facility at S.F.No.249/3, Keelakottai Group, Muthuvayal Village, Paramakudi Taluk, Ramanathapuram District. The proposed project is required to get Environmental Clearance (EC) from the Ministry

of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India, he requested the District Revenue Officer, Ramanathapuram to preside the Public Hearing.

**The District Revenue Officer, Ramanathapuram:**

In the Continuation District Revenue Officer, Ramanathapuram welcomed the gathering, He said that the proposed Common Bio-Medical Waste Treatment Facility project will be explained by the Project Proponent. All the opinion of the people will be recorded and send to the Government.

District Environmental Engineer, Tamilnadu pollution Control Board, Ramanathapuram asked the proponent to explain the project.

**Presentation by Thiru. Raj mohan:**

The project proponent welcomed the officials and the Public and started his speech, through the Power Point Presentation. He explained about the Common Bio-Medical Waste Treatment Facility at S.F.No.249/3, Keelakottai Group, Muthuvayal Village, Paramakudi Taluk, Ramanathapuram District. They also presented about the plan layout, all the survey conducted by them. They have also promised to allot CSR fund of Rs.2 lakhs for construction of Electrical Gasifier Crematorium. After the presentation there was agitation in the public against project.

**Thiru. Saravana Perumal, RDO, Paramakudi:**

The Revenue Divisional Officer, Paramakudi instruct the people voice their opinion one by one then only it will be recorded and send to the government.

**Thiru. Govindarajalu, District Revenue Officer:**

The District Revenue Officer asked the stakeholders of the project to answer the questions of the public whether the construction of the Common Bio-Medical Waste Treatment Facility will affect the people.

**Mr. Raju (Naam Tamizhar Katchi):**

There is no proper advertisement in any villages. Tamilnadu Pollution Control Board submitted the project to the entire village through District Collector and Block Development Officer then only all the Panchayat President can arrange the meeting and decide accordingly, and conduct of Public Hearing is illegal. So the public hearing may be cancelled.

**Thiru.Mugilan (Tamilnadu Environmental protection convenor):**

Due to the project only 10 km of surrounding is affected and hence the EIA Report covers the same. In the affected villages the people is unaware of the public hearing no poster is pasted on public wall. The previous public hearing for the same project is not conducted properly and hence cancelled.

The effect of the project will be throughout the year, so the Bio Medical Waste is very dangerous and hence it should not be implemented as said. After prior advertisement of the project conduct the public hearing.

**Thiru. Ramamoorthi, (Naam Tamizhar Katchi):**

He said that they opposed the project during the early stage itself. Further he said the people's livelihood depends on Kanmoi, that is used for daily purposed including cattle feed. He said the if Bio Medical Waste mixes with the kanmoi there will be huge resistance from the public. He added that the project is destroying the people nearby. He also said that, Bio Medical Waste should not be dumped in the Kanmoi. He added that the project should not be implemented in our village. He also added that the project be stopped and the implementation should be in hills, beaches and abandoned places. So the public hearing may be cancelled.

**Thiru. Marimuthu, Muthuvayal Village:**

He said that the project initially started in 2003, discharges dangerous effluent, therefore should not be implement in water catchment or kanmoi area. He said that there are 20 kanmoi depending on overflow water of this kanmoi,

hence affecting the entire water resources. So the public hearing may be cancelled.

**Thiru. Selvaraj, Madurai:**

He said that there is no proper advertisement for the project. Further he said that officials should upload online 46 documents, only five documents is uploaded. He added that there is a widespread people's protest in Manamadurai SIPCOT, Perundurai SIPCOT and Thiruchuli against the implementation of this kind project. So the public hearing may be cancelled.

**Thiru. Kumaran, (Naam Tamizhar Katchi):**

He said from last year they are representing against the project, no proper written documents are distributed to the people.

Moreover, he said that there is no public in the meeting, he added that the ill effects of the project, should be explained to the public, he added that the project should be cancelled.

**Thiru. Rajkumar Bharathi, (Naam Tamizhar Katchi), Kamankottai Village:**

The implementation of the project Common Bio-Medical Waste Treatment Facility is not properly advertised in the surrounding villages namely, Kamankottai, Kummukottai, Manjur, Muthuvayal, Poovilathur, karuthanenthal, Dheventhira nallur.

He pointed out if the water from the kanmoi overflows and reaches the village then the entire people will be affected. He said that the same kind of project functioned in Viruthunagar district form 2006 to 2016. This lead to various diseases to the nearby people. He added that only 20-30 people from nearby village is attending this meeting.

**Thiru. Justin Valanarasu (Naam Tamizhar Katchi):**

He said that due to this project the ground water gets polluted. He said that there will be no support from the people for the project at anytime. No proper advertisement is done for the public hearing. He also added that the public hearing is illegal.

**Thiru. Vinoth, Alangai village (Naam Tamizhar Katchi):**

He enquired whether the doctor has come for the meeting. He also said the Bio Medical Waste is from saving a life. He enquired whether the Bio Medical Waste does not evolve new diseases in the people.

He said that there is no development due to the project to the surrounding people like job, infrastructure development etc.,. He also questioned whether the project is treating Bio Medical Waste or other wastes. He aslo emphasised that the project should be cancelled.

**Thiru. Govintharajalu, DRO:**

He asked the doctors to explain about the project about the treatment of waste.

**Dr.Chinadurai Abdulla:**

He answered that the project is treating only Bio Medical Waste no industry waste is treated.

**Public:**

The public hearing should be cancelled and there is no advertisement for the public hearing people started to agitate to cancel the public hearing.

**Thiru. Mukilan (Tamilnadu Environmental Protection Convenor):**

He said that in the minutes of the pervious public hearing held DRO cancelled the meeting due to the absence of people from nearby village. Like this meeting should be cancelled and conducted again. He further pointed out any Common Bio-Medical Waste Treatment is functioning in Tamilnadu without affecting the health of the people nearby. He raised the question whether is there is any complaint received in the public operation in the plant.

He said that the Common Bio Medical Waste Treatment (CBMWT) in Viruthunagar District, Thiruchuli Taluk, A.Mukkulam Village is closed.

He said that Common Bio-Medical Waste Treatment, Muthuvayal there are 160 people affected by Kidney failure, Cancer etc., The project proponent has not mentioned in the sitting criteria of the project.

He further said that no distance criteria mentioned in the project. Out of 46 documents only 5 documents has been uploaded.

Further he questioned distance between the vaigai river project site is not mentioned in the report. He said that the tree plantation by the project proponent is not sufficient. No Green Belt is also developed in the project site. He also pointed out that Bio Medical Waste mixed with cauvery river has made the river poison as per IIT professor report. He also added that wet scrubber in the attached to the chimney will increase the drought / acid rain of the surrounding.

The project proponent has not done the Air survey inspection has mentioned in the EIA Report. They have conducted in Air pollution 8 places in the without electricity. The AAQ survey has to be given to the people along with other details. This type of industries should be banned in the site.

**DRO, Ramanathapuram:**

DRO, Ramanathapuram asked whether there is any reply from the IMA in preventing Air, Water and Soil pollution. However people objected the doctors reply.

**Thiru. Arul Victor, (Naam Tamizhar Katchi):**

He said that there are getting affected by the Municipal Solid Waste (Biodegradable) in Paramakudi. He also questioned the effectiveness of Common Bio-Medical Waste Treatment.

**Thiru. Raju, (Naam Tamizhar Katchi):**

For the last 19 years no tree plantation is carried out in the vicinity of the Common Bio-Medical Waste Treatment Facility. Moreover Vaigai River and nearby kanmoi presence is not mentioned in the report.

The list of participants in the meeting, the video Pen drive recording of the meeting proceedings are sent along with this.

R. Dhilip Kumar 22-9-25
**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Ramanathapuram**

22/9/25
**District Revenue Officer,**
**Ramanathapuram**

**பொது உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்பு, சர்வே எண்.249/3, கீழக்கோட்டை குரூப், முத்துவயல் கிராமம், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் தொடர்பாக 17.09.2025 முற்பகல் 10.30 மணியளவில் தி/எ்.ஸ்ரீ ஜெயமணி சரஸ்வதி திருமண மஹால், கதவு எண். 66/1A,போகலூர், JSK பெட்ரோல் பம்ப் அருகில், சத்திரக்குடி கிராமம், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. கோவிந்தராஜலு, | : | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>இராமநாதபுரம். |
| 2. | திரு. சரவணப் பெருமாள் | : | வருவாய் கோட்ட அலுவலர்,<br>பரமக்குடி. |
| 3. | திரு. இரா. திலிப் குமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>இராமநாதபுரம். |
| 4. | திரு. வரதன் | : | வட்டாட்சியர் அலுவலர்,<br>பரமக்குடி |
| 5. | திரு. திருநாவுக்கரசு | : | வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>பரமக்குடி ஊராட்சி ஒன்றியம்,<br>பரமக்குடி. |
| 6. | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | : | 109 எண்கள்<br>(விவரம் இணைக்கப்பட்டுள்ளது) |

பொது உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்பு, சர்வே எண்.249/3, கீழக்கோட்டை குரூப், முத்துவயல் கிராமம், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம், மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர், மற்றும் பொதுமக்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இராமநாதபுரம் அவர்கள் வரவேற்றார். மேலும் தலைமை ஏற்று நடத்த மாவட்ட வருவாய் அலுவலரை கேட்டுக்கொண்டார்.

**திரு. கோவிந்தராஜலு, மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம்:**

தொடர்ந்து, திரு. கோவிந்தராஜலு, மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம், அவர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் தனது வணக்கத்தினை தெரியப்படுத்திக்கொண்டார். பொது உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு அமைப்பு, சர்வே எண்.249/3, கீழக்கோட்டை குரூப், முத்துவயல் கிராமம், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம், இத்திட்ட உரையானது திட்ட முனைவர்களால் விளக்கப்படும், பொதுமக்களின் கருத்துக்கள் அனைத்தும் பதிவுசெய்யப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் எனக்கூறி பொது மக்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

பின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்கள் இத்திட்டம் தொடர்பாக திட்ட முனைவர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனக்கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**திட்டத்தின் முனைவர்: திரு. ராஜ் மோகன்:**

திட்டத்தின் முனைவர் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் ஆலோசனைகளை வழங்க வந்த பொது மக்களையும், மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம், வருவாய் கோட்ட அலுவலர், பரமக்குடி மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இராமநாதபுரம் அவர்களையும் வரவேற்று தனது உரையைத் தொடங்கினார். விளக்கக்காட்சியின் மூலம் கீழக்கோட்டை குரூப், முத்துவயல் கிராமம், சர்வே எண்.249/3, பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் அமையவுள்ள, பொது உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையம் பற்றி விளக்கமளித்தார். அவர்கள் திட்ட வரைபடம் மற்றும் தாங்கள் மேற்கண்ட அனைத்து சர்வே பற்றியும் விளக்கம் அளித்தார். மேலும், அவர்களுடைய C.S.R நிதியில் (இரண்டு இலட்சம்) மின் மயானத்திற்கு கட்டுமான பணிக்கு வழங்குவதாக உறுதி அளித்தார். அவருடைய விளக்கம் முடிந்த பிறகு பொது மக்கள் தங்களுடைய எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

**திரு. சரவணப் பெருமாள், வருவாய் கோட்ட அலுவலர், பரமக்குடி:**

வருவாய் கோட்ட அலுவலர், பரமக்குடி அவர்கள் பொதுமக்கள் அவர்களுடைய கருத்துகளை ஒருவர் பின் ஒருவராக தெரிவிக்குமாறும், மேற்படி கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

**திரு. கோவிந்தராஜலு, மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம்:**

மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம் அவர்கள் திட்டத்தின் பங்குதாரர்களிடம் பொது மக்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**திரு. ராஜூ (நாம் தமிழர் கட்சி):**

இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு முறையான விளம்பரம் செய்யப்படவில்லை. மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிக்கையினை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களிடம் கொடுத்த பிறகு, அவர்கள் உள்ளூர் தீர்மானம் போட வேண்டும் என தெரிவித்தார். எனவே, இந்த கருத்து கேட்பு கூட்டமே சட்டத்திற்கு புறம்பானது. இக்கூட்டத்தினை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

**திரு. முகிலன்(தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர்):**

இந்த திட்டத்தின் காரணமாக சுற்றி உள்ள 10 கி.மி கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விபரம் கிராம மக்களுக்கு தெரியவில்லை. பாதிக்கப்பட்ட கிராமங்களின் மக்களுக்கு, இக்கருத்து கேட்பு கூட்டம் பற்றி எவ்வித விளம்பரமும் செய்யப்படவில்லை, பொது இடங்களில் எந்தவொரு சுவரொட்டியும் ஒட்டப்படவில்லை. இதற்கு முன்பே பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முறையாக விளம்பரம் மேற்கொள்ளப்படவில்லை என்று அக்கூட்டம் ரத்து செய்யப்பட்டது. இத்திட்டத்தின் விளைவு ஆண்டாண்டு காலமாக பொது மக்களை பாதிப்படைய செய்யும் எனவே, முறையான விளம்பரம் செய்து பிறகு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்துமாறு தெரிவித்தார்.

**திரு. இராமமூர்த்தி (கல்வி மேம்பாட்டு குழு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்):**

திட்டத்திற்கு ஊர் பொதுக்கள் ஆரம்ப காலத்திலிருந்தே எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும், பொது மக்களின் வாழ்வாதாராம் அருகிலுள்ள கண்மாயிலிருந்து தினசரி விவசாய வேலை நடைபெற தடையாக இருக்கும் என தெரிவித்துக் கொண்டார். கண்மாயில் உயிரி மருத்துவ கழிவுகள் கலந்தால், பொது மக்களிடமிருந்து கடும் எதிர்ப்பு வரும் என கூறினார்.

மேலும், மேற்படி திட்டமானது தங்கள் கிராமத்திற்கு தேவை இல்லாத ஒன்று எனவும், மேலும், இத்திட்டத்தினை மலைப்பகுதி, கடற்கரைபகுதி மற்றும் மக்களால் கைவிடப்பட்ட பகுதிக்கு மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். எனவே கூட்டத்தினை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

**<u>திரு. மாரிமுத்து, முத்துவயல் கிராமம்:</u>**

இந்த திட்டம் மிகவும் ஆபத்தான கழிவுளை உற்பத்தி செய்கிறது. எனவே, நீர்பிடிப்பு பகுதிகள், நீர்நிலைகள் ஆகிய பகுதிகளில் செயல்படுத்த கூடாது என கூறினார். அருகில் உள்ள கண்மாய் நிறைந்து மேலும் 20 கண்மாய்க்கு செல்கிறது. எனவே இந்த திட்டம் முழு நீர்நிலைகளையும் பாதிக்கிறது என கூறினார் எனவே, இந்த திட்டத்தினை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

**<u>திரு. செல்வராஜ், மதுரை:</u>**

இந்த திட்டத்திற்கு உரிய விளம்பரம் செய்யப்படவில்லை எனவும் மேலும், அதிகாரிகள் 46 ஆவணங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆனால் வெறும் 5 ஆவணங்களை மட்டுமே பதிவேற்றம் செய்துள்ளனர் எனவும் தெரிவித்தார். இது போன்ற திட்ட செயலாக்கத்துக்கு எதிராக மானாமதுரை சிப்காட், பெருந்துறை சிப்காட் மற்றும் திருச்சுழி ஆகிய இடங்களில் பலத்த அளவில் எதிர்ப்பு உள்ளது எனவும் தெரிவித்தார். எனவே, இந்த திட்டத்தினை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

**<u>திரு. குமரன் (நாம் தமிழர் கட்சி):</u>**

இந்த திட்டத்திற்கு கடந்த வருடமே எதிர்ப்பு தெரிவித்ததாகவும் மக்கள் மத்தியில் சரியான ஆவணங்கள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். மேலும், கூட்டத்தில், பொது மக்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றும், இத்திட்டத்திற்கு தீங்கு விளைவிக்கும் அம்சங்களையும் பொது மக்களுக்கு விளக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

**<u>திரு. ராஜ்குமார் பாரதி, காமன்கோட்டை கிராமம் (நாம் தமிழர் கட்சி):</u>**

பொது உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலைய திட்டத்தின் செயலாக்கம் குறித்து, இந்த கிராமங்களில் முறையாக விளம்பரம் செய்யப்படவில்லை. காமன்கோட்டை, கும்மகோட்டை, மஞ்சூர், முத்துவயல், பூவளத்தூர், கருத்தனேந்தல் மற்றும் தேவேந்திரநல்லூர்

ஆகிய சுற்றுவட்டார கிராம மக்களுக்கு முறையான விளம்பரம் செய்யப்படவில்லை. மேலும், இத்திட்டதத்திற்கு அருகிலுள்ள கண்மாயில் நீர் நிறைந்து ஏனைய 20 கண்மாய்களுக்கு சென்றால் இந்த ஊர் மக்கள் பலர் பாதிக்கபடுவார் என குறிப்பிட்டார். விருதுநகர் மாவட்டத்தில் இது மாதிரியான திட்டம் செயல்படுத்தப்பட்டு அதனால் அருகிலுள்ள மக்கள் பல்வேறு நோயினால் அவதிபட்டனர் எனக் கூறினார். மேலும், அருகில் உள்ள கிராமத்திலிருந்து 20 முதல் 30 நபர்கள் மட்டுமே இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்தார். எனவே, இந்த திட்டத்தினை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

**<u>திரு. ஜெஸ்டின் வல்லரசு (நாம் தமிழர் கட்சி):</u>**

இந்த திட்டத்தின் காரணமாக நிலத்தடி நீர் மாசுபடும் எனவும், இந்த திட்டத்திற்காக மக்களிடம் எந்த ஆதரவும் கிடைக்கப்போவதில்லை எனவும், இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு முறையான விளம்பரம் செய்யப்படவில்லை என கூறி, இந்த திட்டமே சட்டவிரோதமானது என்று கூறினார். எனவே, இந்த திட்டத்தினை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

**<u>திரு. வினோத், அலங்கை கிராமம் (நாம் தமிழர் கட்சி):</u>**

பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு மருத்துவர்கள் வருகை புரிந்துள்ளார்களா என வினா எழுப்பினார். இந்த மருத்துவ கழிவானது ஒரு உயிரை காப்பாற்றியதின் எச்சமே எனவும், ஆனால், இந்த உயிரி மருத்துவ கழிவுகளால் பொது மக்களுக்கு வேறு புதிய நோய்களை உருவாக்கி விட கூடாது என தெரிவித்தார். மேலும், இந்த திட்டத்தின் மூலம் அருகில் இருக்கும் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்போ, உட்கட்டமைப்பு மேம்பாடு எதுவும் ஏற்பட போவதில்லை எனவும் தெரிவித்தார். இந்த திட்டம் மருத்துவ கழிவுகளை மட்டுமே கையாளுகிறாதா? என வினா எழுப்பினார். மேலும், அவரும் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

**<u>திரு. கோவிந்தராஜலு, மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம்:</u>**

மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம் அவர்கள் மருத்துவரிடம் எந்த மாதிரியான கழிவுகள் சுத்திகரிக்கப்படுகிறது என விளக்கமளிக்குமாறு கூறினார்.

**முனைவர்.சின்னத்துரை அப்துல்லா:**

இந்த திட்டம் பொது உயரி கழிவுகளை மட்டுமே கையாளுகிறது. வேறு எந்த தொழிற்சாலை கழிவுகளும் சுத்திகரிப்பு செய்யபடுவதில்லை என பதிலளித்தார்.

**பொதுமக்கள்:**

இந்த கருத்து கேட்டு கூட்டம் நிறுத்தபட வேண்டும் எனவும் போதிய விளம்பரம் செய்யப்படவில்லை என ஆர்ப்பாட்டம் செய்ய தொடங்கினர். எனவே, இந்த திட்டத்தை ரத்து செய்யுமாறு கோஷம் எழுப்பினார்கள்.

**திரு. முகிலன்(தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர்):**

பொது மக்கள் பங்கேற்காத காரணத்தினால் மாவட்ட வருவாய் அலுவலர் முந்தைய கருத்து கேட்புக் கூட்டத்தை ரத்து செய்தார். அதேபோல், இந்த கூட்டத்தையும் ரத்து செய்ய வேண்டும் என கூறினார். மேலும், விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், அ.முக்குளம் கிராமத்தில் இது போன்ற மருத்துவகழிவு திட்டம கைவிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மேலும், அவர் இந்த திட்டத்தின் செயல்பாட்டின் போது எதாவது மனு அளிக்கப்பட்டுள்ளதா? என வினவினார். முத்துவயல் கிராமத்தில் அமையவுள்ள பொது உயரி மருத்துவ கழிவு நிலையம் மூலம் 160 மக்கள் சிறு நீரக கோளாறு, மலட்டுத்தன்மை மற்றும் புற்று நோய் போன்ற பல பாதிப்புகளை எதிர் கொள்கிறார்கள். இந்த திட்டத்தின் முனைவர், திட்டத்தின் அடிப்படை அளவுகோல்களை பற்றி குறிப்பிடவில்லை.

மேலும் தூர அளவீடுகளையும் கூறவில்லை. 46 ஆவணங்களுக்கு பதிலாக வெறும் 5 ஆவணங்களை மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அவர் இந்த திட்டத்திற்கும் வைகை நதிக்கும் உள்ள தூரத்தை குறிப்படவில்லை. பசுமை காடுகள் வளர்பதை பற்றி எந்தவொரு அறிவுரையும் சொல்லப்படவில்லை.

மேலும், அவர் உயரி மருத்துவ கழிவுகள் காவேரி ஆற்றில் கலந்து காவேரி ஆறே விஷமாக மாறி உள்ளது என IIT பேராசிரியர் அவர்கள் அறிகை தாக்கல் செய்துள்ளார். மேலும், அவர் நச்சு வாயுவினால் மேகங்கள் கூடாமல் மழை பொழிவை தடுகிறது. அப்படியே மழை பெய்தாலும் அமில மழையே பெய்ய கூடும் என கூறினார். திட்ட ஆதரவாளர் சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காற்று ஆய்வை மேற்கொள்ளவில்லை எனவும், மின்சாரம் இல்லாத 8 இடங்களில் காற்று மாசு சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார். எனவே காற்று தர ஆய்வறிக்கை பொது

மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இந்த மாதிரியான தொழிற்சாலைகள் தடைசெய்யப்படவேண்டும் என தெரிவித்தார். எனவே இது முற்றிலும் கைவிடப்படவேண்டிய திட்டமாகும் என தனது எதிர்ப்பை தெரிவித்தார்.

**திரு. கோவிந்தராஜலு, மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம்:**

காற்று, நீர் மற்றும் நிலம் மாசுபாட்டை தடுக்க திட்ட முனைவர்களிடம் பதில் உள்ளதா? என வினவினார். ஆனால் பொது மக்கள் மருத்துவரின் பதிலை நிராகரித்தனர்.

**திரு. அருள் விக்டர் (நாம் தமிழர் கட்சி):**

அவர் பரமக்குடியில் மக்கும் தன்மை கொண்ட நகராட்சி குப்பைகள் மூலமாகவே எங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இப்படி இருக்கும் தருவாயில் இந்த திட்டத்தின் மூலம் மிகவும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இந்த திட்டத்தை ரத்து செய்யுமாறு தனது எதிர்ப்பை தெரிவித்தார்.

**திரு. ராஜூ (நாம் தமிழர் கட்சி):**

கடந்த 19 ஆண்டுகளாக 1 மரத்தை கூட தங்களுடைய இந்த திட்ட முனைவோர்களால் நடபடவில்லை. மேலும் வைகையாறு மற்றும் அருகிலுள்ள கண்மாய் குறித்து அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எனவே, இந்த திட்டத்தை ரத்து செய்யுமாறு தனது எதிர்ப்பை தெரிவித்தார்.

கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் மற்றும் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ குறுந்தகடு ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

R. Philip kumar 22-9-25
**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**இராமநாதபுரம்**

22/9/25
**மாவட்ட வருவாய் அலுவலர்,**
**இராமநாதபுரம்**